சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா. 2 திரு. பால விநாயக சந்தர் த /பெ அருணாச்சலம் , வயது .

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .–**

சத்திய பிரமாண வாக்குமூலத்தில் நான் குடியிருப்பதாக தெரிவித்துள்ள முகவரியில் நான் குடியிருப்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. புகார்தாரர் சீட்டு நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தார் நடத்தி வந்த சீட்டில் சாந்தினி என்பவர் சீட்டு கட்டி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் எதிரிக்கு ரூபாய் 5 லட்சம் பணம் கொடுத்த போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். குற்றம் சாட்டப்பட்ட தயாளன் என்பவர் ஆசிரியர் என்றால் சரிதான். பணம் கொடுத்த போது நான் இல்லையென்றாலும் சாந்தினி என்பவரிடம் கொடுத்த காசோலையை வைத்து தான் புகார் மோசடியாக அவர் பெயரை பூர்த்தி செய்து இவ்வாறு தொடுத்துள்ளார் என்றால் சரியில்லை. புகார்தாரர் சீட்டு நடத்தி வந்தார் என்றாலும் அதற்கு பிரதி மாதம் எதிரி பணம் செலுத்தி வந்தார் என்றாலும் அந்த பணத்தை ஆன்லைன் மூலமாக தான் செலுத்தி வந்தார் என்றாலும் சரியல்ல. அதற்குண்டான ஆதாரம் எதிரிடம் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரர் நடத்தி வந்த இரண்டு சீட்டில் மாதத் தவணையாக பணம் செலுத்தி வந்தார் என்றாலும் அந்த இரண்டு சீட்டு பணத்தையும் புகார்தாரர் கொடுக்காமல் ஏமாற்றி விட்டார் என்றாலும் சரி அல்ல. சாந்தினி என்பவர் புகார்தாரரின் நெருங்கிய நண்பர் என்றாலும் சாந்தினி என்பவரிடம்தான் எதிரி ரூபாய் ஒரு லட்சம் கடன் பெற்றார் என்றாலும் அதற்கு ஈடாக காசோலை அவரிடம் கொடுத்திருந்தார் என்றாலும் அந்த காசோலையை மோசடியாக பயன்படுத்தி புகார்தார் இவ்வழக்கு கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல.

சாந்தினி என்பவரிடம் பெற்ற கடனை எதிரி முழுவதும் திரும்ப செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. ரூபாய் 6 ரூபாய் வட்டியை எதிரி செலுத்திவிட்டார் என்றாலும், அந்த விவரம் சாந்தகுமாருக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரிக்கும் புகார்தருக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சாந்தினியிடம் கொடுத்த காசோலையை தான் புகார்தாரர் மோசடியாக பூர்த்தி செய்து இவருக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் தெரிவித்துள்ள மாவட்ட கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்ட தபால் என்று அனுப்பப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தேதி எனக்கு குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. அந்த கடிதத்தை நான் தான் கைப்பட எழுதினேன். மாவட்ட கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஆனது( பு.சா.ஆ 3, 4 ) தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றாலும் கைப்பட எழுதவில்லை என்றாலும்,எனவே நான் பொய்யாக சாட்சி அளிப்பது புலப்படுகிறது என்றாலும் சரியல்ல. எதிரி பணிபுரியும் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கும் கடிதம் அனுப்பி உள்ளார் என்றால் சரிதான். நானும் புகார்தாரரும் கூட்டு சதி செய்து சாந்தினி என்பவரிடம் எதிரி பெற்ற ரூபாய் ஒரு லட்சத்திற்கு ஆதாரமாக கொடுத்த காசோலையை மோசடியாக பூர்த்தி செய்து இவ்வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி புகார்தாரர் நடத்தி வந்த சீட்டில் சேர்ந்து மாதம் பணம் செலுத்தி வந்தார் என்றாலும் ஆனால் அதற்கு ஈடாக காசோலை ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் இவ்வழக்கு காசோலையானது சாந்தினி என்பவரிடம் கொடுத்த காசோலை என்றாலும் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.